**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 27/மா/2025

நாள் 16.03.2026

G. நந்தகுமார்,
சென்னை–91. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–60 091, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலை, பிளாட் எண்.1639, என்ற முகவரியில் வசிக்கும் திரு. G.நந்தகுமார் என்பவரின் 03.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.12.2024 அன்று பெறப்பட்டு 27/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–60 091, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலை, பிளாட் எண்.1639, என்ற முகவரியில் வசிக்கும் திரு. G.நந்தகுமார் என்பவர் 03.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

"I submit the following few lines for your kind consideration and request you to cancel the notice under reference.

I purchased the Plot No 1639 Western Portion, 11th Main Road, Ram Nagar South, Madipakkam, Chennai 600 091 in the year 1999 and after getting necessary building permission constructed a building and living there since then and I was assessed for house tax under No.MPK 4998. I paid the house tax upto 2011-2012 to the Madipakkam Grade-I Panchayat and from II/11-12 to II/14-15, and also II/16-17 to I/18-19 to the Greater Chennai Corporation.

I submit that in the year 2015 I proposed to demolish the existing building and to construct a new building. I applied for Demolition and Reconstruction of building permission and it was granted under Building Plan No. BA/WDCN14/03705/2015 Dated: 19.8.2015 and I paid a sum of Rs.85,180/- (Rupees Eighty five thousand one hundred and eighty) towards fees by demand drafts.

I also paid a sum of Rs. 21,000/- (Rupees twenty one thousand to the Chennai Metropolitan Development Authority towards Development charges and regularization fees on 12.8.2015.

I submit that to due to Flood hit in the year 2015, the work could not be commenced and after analysing the flood situation, I thought to submit a revised Plan to the Chennai Corporation and revised the entire plan and applied for sanction.

I submit that the above said revised plan was accepted and approved and I was directed to pay the fees as follows:-

| | |
|---|---|
| Building licence fees, Plan charges, Scrutiny Fees, Security Deposit, Tentative improvement charges totalling to (Rupees seventy one thousand six hundred and fifty only) | Rs. 71,650/- |
| CMDA Development charges (Rupees five thousand only) | Rs. 5,000/- |
| Workers Welfare Board (Rupees forty three thousand only) | Rs. 43,000/- |
| V.L.T.(Rupees three thousand only) | Rs. 3,000/- |

I submit that I paid the above sum by way Demand Drafts and I was given sanction for the construction of the building in the above plot No. 1639, Ram Nagar South (Western Portion), 11th Main Road, Ram Nagar, Madipakkam, Chennai 600 091.

I submit that I constructed the building as per the revised plan sanctioned by the Greater Chennai Corporation and completed the same in the year 2018.

I submit that the said building was assessed for House Tax under property Id No.14-188-25421-000 at the rate of Rs. 3,800/- (Rupees three thousand eight hundred) per half year and the earlier assessment for the old building Id No.14-188-10214-000 was cancelled.

I paid the House Tax assessed from the 1st Half of the year 2018-2019 to 1st Half of 2021-2022 and therefore there is no due of House Tax to be paid by me for the Building in Plot No. 1639 Ram Nagar South (Western (Portion), 11th Main Road, Ram Nagar, Madipakkam, Chennai 600 091. I have paid my house tax up to second half of 2024-2025. Hence there is no outstanding of payment of House Tax to be paid by me as on date.

While that being so I was receiving messages from the Greater Chennai Corporation that vacant land tax to property Id No. 14-188-22075 amounting to Rs. 22345/- (Rupees twenty two thousand three hundred and forty five) in my name in respect of Plot No. 1636 Western Portion, 11th Main Road, Ram Nagar, Madipakkam South Chennai 600 091.

Since the said fact is wrong and there is no vacant land, as already building was constructed and the building was assessed to house tax and the tax has been paid regularly without default, I made a representation to the Assistant Commissioner, Zone-14, Greater Chennai Corporation, Puzhuthivakkam, Chennai 600 091 to cancel the said assessment No. 14-188-22075 by letters dated 5/07/2021 which was delivered in person and acknowledgement obtained.

The Assistant Commissioner has not taken any action to cancel the above wrong assessment for vacant land tax.

On 27.4.2022 I had submitted another representation in person to ARO, Puzhuthivakkam requesting to cancel the wrong Assessment.

While that being so, on 3.2.2023, I received a Notice under Section 138, Schedule IV, Part VI Rule 20 to 29 of the Chennai City Municipal Corporation Act directing me to pay a sum of Rs. 24,980/- (Rupees twenty four thousand nine hundred and eighty only) towards property tax which was wrongly assessed. There cannot be two assessment for a Plot for Property Tax for the building and vacant land tax (there is no vacant land) and further informed that if I fail to make payment, action will be initiated against your property as per the CCMC Act, 1919.

The entire assessment was wrongly made by the Corporation and not taken any action even after the same is brought to the notice of the Assistant Commissioner Zone-IV about the same and request to cancel the assessment, the Assistant Commissioner failed to take any action on the representations sent by me and finally I was issued the illegal notice and I was threatened by the above said notice that if I fail to pay the tax action will be initiated against my property as per the CCMC Act, 1919.

In short, there are two assessments for the same property i.e. Plot No. 1639 Ram Nagar South (Western Portion), 11$^{th}$ Main Road, Ram Nagar, Madipakkam, Chennai 600 091, one is for house tax and another for vacant land tax. Hence the assessment for vacant land tax relating to the above said property to be cancelled.

I submit that, having no other way, I am constrained to challenge the illegal Assessment No. 14-188-22075 and the Notice issued No. R.D.C. No. G1/000535/2023 demanding payment of vacant land tax amounting to Rs.24,980/- (Rupees twenty four thousand nine hundred and eighty only) by preferring an Appeal to the Regional Deputy Commissioner, GCC, Adyar and humbly prayed the Appellate Authority and the Regional Deputy Commissioner (South), Greater Chennai Corporation to cancel the Assessment No.14-188-22075 and the consequential Notice issued No. R.D.C. No. G1/000535/2023 demanding payment of vacant land tax amount of Rs. 24,980/- (Rupees twenty four thousand nine hundred and eighty only) which was made without any basis for vacant land tax, under different assessment Number actually when there is no vacant land at all.

Since no reply from the appellate authority for nearly one year inspite of the representation in person I have submitted another representation on 19.4.2024 for which in also I have not received any reply whatsoever.

The said Appeal was also not considered by the Appellate Authority and because of the inaction on the part of the officials of the Greater Chennai Corporation I am put to mental agony and irreparable loss and hardship.

Since, I have no other effective and efficacious remedy against the inaction on the part of the Officials of the Greater Chennai Corporation, I approach this Hon'ble Ombudsman for redressing my grievances.

I pray that the Hon'ble Tamil Nadu Local Bodies Ombudsman to redress my grievance by passing appropriate orders to the Officials of the Greater Chennai Corporation and thus render justice."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 12.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையர் (முதுநிலை) தனது 19.02.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:–

"சென்னை–91, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலை, பிளாட் எண்.1639ல் (மேற்கு பகுதி) வசிக்கும் திரு. G.நந்தகுமார் அவர்களது குடியிருப்புக்கு முந்தைய மடிப்பாக்கம் ஊராட்சி மூலம் சொத்துவரி எண் (எண் MPK No.4998) விதிக்கப்பட்டு கடந்த 2011ஆம் ஆண்டு மடிப்பாக்கம் ஊராட்சி சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்னர் சென்னை மாநகராட்சியால் புதிய சொத்து வரி எண் 14–188–10214–000 வழங்கப்பட்டு சொத்துவரி வசூலிக்கப்பட்டு வந்தது.

மனுதாரர் தனது குடியிருப்பினை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட வரைபட அனுமதி கோரிய பொழுது தனியாரின் நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் காலி மனை வரியானது (எண் 14–188–22075–000க்கு) 2011 ஏப்ரல் முதல் செலுத்தும்படி 29.12.2016 தேதியிட்டு காலிமனைக்குண்டான புதிய மதிப்பீடு ஆணை வழங்கப்பட்டது. அதற்குண்டான வரியினை மனுதாரரால் செலுத்தப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் தனது காலிமனைக்குண்டான வரி நிலுவையினை செலுத்தாமல் அந்த மனையில் புதியதாக கட்டிய குடியிருப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிய சொத்துவரி விதிக்க உரிய ஆவணங்களுடன் முந்தைய கட்டத்திற்கான சொத்து வரி எண்ணை (எண்14–188–10214–000) குறிப்பிட்டு சமர்ப்பித்தன் அடிப்படையில் அந்த சொத்துவரி எண் மட்டுமே ரத்து செய்து புதிய கட்டடத்திற்கான சொத்துவரியானது 2018 ஏப்ரல் முதல் செலுத்தும்படி 26.08.2018 தேதியிட்ட புதிய மதிப்பீட்டு ஆணை வழங்கப்பட்டது.

இதனிடையில் செலுத்தாமல் நிலுவையிலிருந்த காலிமனை வரியினை செலுத்துமாறு மனுதாரர் திரு. G.நந்தகுமார் அவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் அவ்வப்பொழுது தெரிவிக்கப்பட்டு வந்துள்ளது.

ஒரே குடியிருப்புக்கு இரண்டு விதமான வரிகள் செலுத்துவது தொடர்பாக அய்யப்பாடு ஏற்பட்டதால் தனியரும் தனது காலிமனை வரியினை (எண் 14–188–22075–000) ரத்து செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு கோரிக்கை வைத்துள்ளார். மேற்கண்ட காலிமனைக்கான வரி நிலுவையிலிருந்த காரணத்தினால் தனியரின் காலிமனை வரி ரத்து செய்யப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டது.

இந்நிலையில் மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் முதுநிலை வருவாய் அலுவலரை கைபேசியில் தொடர்பு கொண்டு மேற்கண்ட காலிமனை வரியினை ரத்து செய்வது தொடர்பாக மீண்டும் கோரிக்கை வைத்ததின் அடிப்படையில் முதுநிலை வருவாய் அலுவலர் அவர்கள் மனுதாரரிடம் மேற்கண்ட காலிமனை வரி நிலுவையில் உள்ள விவரங்களை தெரிவித்ததன் அடிப்படையில் காலிமனை வரி நிலுவை தொகையினை செலுத்த மனுதாரர் உடன்பட்டு செலுத்தியதால், கடந்த 05.02.2026 அன்று மனுதாரரின் நிலத்திற்கு விதிக்கப்பட்ட காலிமனை வரியானது (எண் 14–188–22075–000) ரத்து

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் முதுநிலை வருவாய் அலுவலர் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரின் குடியிருப்புக்கு முந்தைய மடிப்பாக்கம் ஊராட்சி மூலம் சொத்துவரி எண் MPK No.4998 விதிக்கப்பட்ட நிலையில் 2011ஆம் ஆண்டு மடிப்பாக்கம் ஊராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்னர் அவரது குடியிருப்பிற்கு புதிய சொத்து வரி எண் 14-188-10214-000 வழங்கப்பட்டு சொத்துவரி வசூலிக்கப்பட்டு வந்தது.

மனுதாரர் தனது குடியிருப்பினை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட வரைபட அனுமதி கோரிபொழுது மனுதாரரின் நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் காலி மனை வரி எண் 14-188-22075-000க்கு 2011 ஏப்ரல் முதல் செலுத்தும்படி 29.12.2016 தேதியிட்டு புதிய மதிப்பீடு ஆணை வழங்கப்பட்டது. மேற்படி காலிமனை கேட்பு ஆணைக்கு மனுதாரரால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் மனுதார் காலிமனை வரி செலுத்தாததால், வரி நிலுவையில் வைக்கப்பட்டது.

இந்நிலையில், மனுதாரர் புதியதாக கட்டிய குடியிருப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிய சொத்துவரி விதிக்க உரிய ஆவணங்களுடன் முந்தைய கட்டடத்திற்கான சொத்துவரி எண் 14-188-10214-000 குறிப்பிட்டு சமா்ப்பித்தன் அடிப்படையில் அந்த சொத்துவரி எண் மட்டுமே ரத்து செய்து புதிய கட்டடத்திற்கான சொத்துவரி 2018 ஏப்ரல் முதல் செலுத்தும்படி 26.08.2018 தேதியிட்ட புதிய மதிப்பீட்டு ஆணை வழங்கப்பட்டது.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் முதுநிலை வருவாய் அலுவலரை தொடர்பு கொண்டு காலிமனை வரியினை ரத்து செய்ய கோரியபோது முதுநிலை வருவாய் அலுவலர் மனுதாரரிடம் மேற்கண்ட காலிமனை வரி நிலுவையில் உள்ள விவரங்களை தெரிவித்ததன் அடிப்படையில் காலிமனை வரி நிலுவை தொகையினை செலுத்த மனுதாரர் உடன்பட்டு செலுத்தியதால், கடந்த 05.02.2026 அன்று மனுதாரரின் நிலத்திற்கு விதிக்கப்பட்ட காலிமனை வரி எண் 14–188–22075–000 ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற விவரத்தினை மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

7. மனுதாரரின் மனு, மனுதாரர் திரு. G.நந்தகுமார் சார்பாக ஆஜரான திரு.P.சுப்ரமணியன் என்பவரின் வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / உதவி ஆணையரின் (முதுநிலை) அறிக்கை மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர், 1999ம் வருடம், சென்னை–91, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலையில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள தன்னுடைய பிளாட் எண்.1639ற்கு கட்டிட அனுமதி பெற்று அதன் பிரகாரம் வீடு கட்டப்பட்டு, அவ்வீட்டிற்கான சொத்துவரி எண் MPK 4998-ற்கு 2005 – 2011–2012 II வரை முதல்நிலை மடிப்பாக்கம் பஞ்சாயத்திற்கு சொத்து வரி செலுத்தப்பட்டது என்பதும், சொத்து வரி எண்.14–188–10214–000ற்கு II/2011-2012 முதல் II/2014-2015 மற்றும் II/2016-2017 முதல் I/2018-2019 வரை சொத்துவரி செலுத்தியுள்ளார் என்பதும், 2015–ல் மேற்கண்ட வீட்டை இடித்துவிட்டு மீண்டும் வீடு கட்டுவதற்கான கட்டிட அனுமதி 19.08.2018ல் பெற்று அதற்கான தொகை ரூ.85,180/–ஐ செலுத்தப்பட்டும், மேம்படுத்துதல் மற்றும் முறை படுத்துவதற்காக (Development & Regularization Charges) செலுத்த வேண்டிய ரூ.21,000/–

செய்யப்பட்டுள்ளது என்ற விவரங்களை தெரிவித்துக் கொண்டு, மேற்கண்ட விளக்கங்களை ஏற்று மனுதாரரின் மனுவினை முடிவுக்கு கொண்டு வர பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் திரு. G.நந்தகுமார் சார்பாக திரு.P.சுப்ரமணியன் என்பவர் 20.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''1999ம் வருடம், சென்னை–91, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலையில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பிளாட் எண்.1639ற்கு கட்டிட அனுமதி பெற்று அதன் பிரகாரம் வீடு கட்டி மனுதாரர் வசித்து வருகிறார். அவ்வீட்டிற்கான சொத்துவரி எண்.MPK 4998 ஆகும். 2005–2011–2012 II முதல்நிலை மடிப்பாக்கம் பஞ்சாயத்திற்கு, 2005–முதல் 2011–2012 சொத்து வரி செலுத்தியும், மற்றும் சொத்து வரி எண்.14–188–10214–000ற்கு II/2011-2012 முதல் II/2014-2015 மற்றும் II/2016-2017 முதல் I/2018-2019 வரையிலான சொத்துவரி பெருநகர சென்னை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்.

2015ஆம் வருடம் மேற்கண்ட வீட்டை இடித்து விட்டு மீண்டும் வீடு கட்டுவதற்கான கட்டிட அனுமதி 19.08.2018ல் பெற்று அதற்கான தொகை ரூ.85,180/–ஐ செலுத்தியுள்ளார்.

மேம்படுத்துதல் மற்றும் முறை படுத்துவதற்காக (Development & Regularization Charges) செலுத்த வேண்டிய ரூ.21,000/– தொகையினை 19.08.2015 அன்று பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு செலுத்தியுள்ளார். ஆனால் 2015 ம் வருடத்தில் ஏற்பட்ட வெள்ள பெருக்கின் காரணமாக, வீடு கட்ட இயலாததால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முழுமையான திருத்திய கட்டிட வரைபட அனுமதி வேண்டி மனு சமர்ப்பித்தார். மனுதாரர் வீட்டிற்கான திருத்திய கட்டிட வரைபட அனுமதி ஏற்றுக் கொள்ளப்பட்டு மொத்தம் ரூ.1,22,650/– தொகை செலுத்தி, வரைபடம் அனுமதியின்படி 2018ல் கட்டிடத்தின் கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டது. புதிய சொத்துவரி விதிப்பு எண். 14–188–25421–000ற்கு (பழைய சொத்துவரி விதிப்பு எண்.14–188–10214–000 அரையாண்டு வரியாக ரூ.3800/–ஐ செலுத்தியுள்ளார். மற்றும் வரி விதிப்பு எண்.14–188–10214–000, 2018–2019 வருடம் ரத்து செய்யப்பட்டுவிட்டது. மேற்கண்ட சொத்துவரி விதிப்பு எண்ணிற்கு 2025–2026ற்கான இரண்டாம் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தப்பட்டுவிட்டது. எனவே வரி நிலுவை ஏதும் இல்லை.

ஆனால் மேற்கண்ட மனுதாரர் வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு எண்.14–188–22075 என்று குறிப்பிட்டு, காலி மனை வரியாக ரூ.22,345/– செலுத்த கோரி தகவல் வரப்பெற்றது. ஏற்கனவே மனுதாரர் மேற்கண்ட வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, நிலுவையில்லாமல் செலுத்திய நிலையில் காலி மனை வரி என்பது தவறாகும் என குறிப்பிட்டு, அதனை ரத்து செய்யுமாறு 05.07.2021 அன்று மனு அளிக்கப்பட்டது. ஆனால் சொத்து வரி ரூ.24,900/–ஐ, செலுத்தக் கோரி 03.02.2023 நாளிட்ட நோட்டீஸ் அனுப்பப்பட்டது. ஒரு இடத்திற்கு காலிமனை வரியும், வீட்டிற்கான சொத்துவரி விதிப்பும் என்பது முரணானது ஆகும். இருப்பினும், காலிமனை வரியான ரூ.12,376/– 30.01.2026 அன்று செலுத்தப்பட்டது.

எனவே, காலிமனை வரி விதிப்பு எண்.14–188–22075 ரத்து செய்யப்பட்டுவிட்டது என்ற குறிப்பிட்டு மனுதாரர் திரு. G..நந்தக்குமார் அவர்களுக்கும் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் கடிதம் வழங்குமாறும், மேலும் மனுதாரர் தற்போது செலுத்திய காலிமனை வரியான ரூ.12,376/–ஐ வருங்காலங்களில் மனுதாரர் செலுத்த வேண்டிய சொத்து வரியில் சரி செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

தொகையினை 19.08.2015 அன்று பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதும், ஆனால் 2015 ம் வருடத்தில் ஏற்பட்ட வெள்ள பெருக்கின் காரணமாக, வீடு கட்ட இயலாததால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முழுமையான திருத்திய கட்டிட வரைபட அனுமதி வேண்டி மனு சமர்ப்பிக்கப்பட்டு அவ்வீட்டிற்கான திருத்திய கட்டிட வரைபட அனுமதி மாநகராட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்டு மொத்தம் ரூ.1,22,650/– தொகை செலுத்தி, வரைபடம் அனுமதியின்படி 2018ல் கட்டிடத்தின் கட்டுமானம் பூர்த்தி செய்யப்பட்டது என்பதும், புதிய சொத்துவரி விதிப்பு எண் 14–188–25421–000ற்கு (பழைய சொத்துவரி விதிப்பு எண் 14–188–10214–000) அரையாண்டு வரியாக ரூ.3800/–ஐ செலுத்தப்பட்டுள்ளது என்பதும், பழைய வரி விதிப்பு எண்.14–188–10214–000னை 2018–2019 வருடம் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதும், மேற்கண்ட புதிய சொத்துவரி விதிப்பு எண்ணிற்கு 2025–2026ற்கான இரண்டாம் அரையாண்டு வரை சொத்துவரி செலுத்தப்பட்டுவிட்டது என்பதும், எனவே வரி நிலுவை ஏதும் இல்லை என்பதும், ஆனால் மேற்கண்ட வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு எண்.14–188–22075 என்று குறிப்பிட்டு, காலி மனை வரியாக ரூ.22,345/– செலுத்த கோரி தகவல் வரப்பெற்ற நிலையில், ஏற்கனவே மனுதாரர் மேற்கண்ட வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, நிலுவையில்லாமல் செலுத்திய நிலையில் காலி மனை வரி என்பது தவறாகும் என குறிப்பிட்டு, அதனை ரத்து செய்யுமாறு 05.07.2021 அன்று மாநகராட்சிக்கு மனு அளிக்கப்பட்டது என்பதும், ஒரு இடத்திற்கு காலிமனை வரியும், வீட்டிற்கான சொத்துவரி விதிப்பும் என்பது முரணாக இருந்தாலும், காலிமனை வரியான ரூ.12,376/– செலுத்தப்பட்டு, காலிமனை வரி விதிப்பு எண் 14–188–22075–ரத்து செய்யப்பட்டுவிட்டது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் முதுநிலை வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார் என்பதும், அதனை குறிப்பிட்டு மனுதாரருக்கும் மற்றும் சென்னை குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் கடிதம் வழங்குமாறும், மனுதாரர் தற்போது செலுத்திய காலிமனை வரியான ரூ.12,376/–ஐ வருங்காலங்களில் மனுதாரர் செலுத்த வேண்டிய சொத்து வரியில் சரி செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் சார்பாக ஆஜரான திரு.P.சுப்ரமணியன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரின் குடியிருப்புக்கு முந்தைய மடிப்பாக்கம் ஊராட்சி மூலம் சொத்துவரி எண் MPK No.4998 விதிக்கப்பட்ட நிலையில் 2011ஆம் ஆண்டு மடிப்பாக்கம் ஊராட்சி பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பின்னர் அவரது குடியிருப்பிற்கு புதிய சொத்து வரி எண் 14–188–10214–000 வழங்கப்பட்டு சொத்துவரி வசூலிக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட குடியிருப்பினை இடித்துவிட்டு புதிய குடியிருப்பு கட்ட பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டட வரைபட அனுமதி கோரும் போது மனுதாரரின் நிலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் காலி மனை வரி எண் 14–188–22075–000க்கு 2011 ஏப்ரல் முதல் செலுத்தும்படி புதிய மதிப்பீடு ஆணை வழங்கப்பட்ட கேட்பு ஆணைக்கு மனுதாரரால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கப்படாமல், மேற்கண்ட காலிமனை வரி செலுத்தாததால், வரி நிலுவையில் வைக்கப்பட்டது என்பதும், இந்நிலையில், மனுதாரர் புதியதாக கட்டிய குடியிருப்புக்காக பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிய சொத்துவரி விதிக்க உரிய ஆவணங்களுடன் முந்தைய கட்டடத்திற்கான சொத்துவரி எண் 14–188–10214–000 குறிப்பிட்டு சமர்ப்பித்தன் அடிப்படையில் அந்த சொத்துவரி எண் மட்டுமே ரத்து செய்து புதிய கட்டடத்திற்கான சொத்துவரி 2018 ஏப்ரல் முதல் செலுத்தும்படி 26.08.2018 தேதியிட்ட புதிய மதிப்பீட்டு ஆணை வழங்கப்பட்டது என்பதும், மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் முதுநிலை வருவாய் அலுவலரை தொடர்பு கொண்ட போது காலிமனை வரி நிலுவையில் உள்ள விவரங்களை தெரிவித்ததன் அடிப்படையில், காலிமனை வரி நிலுவைத் தொகையினை செலுத்தியதால், மனுதாரரின் நிலத்திற்கு விதிக்கப்பட்ட காலிமனை வரி எண் 14–188–22075–000 ரத்து செய்யப்பட்டுவிட்டது என்பதும் பெருநகர மாநகராட்சி மண்டலம் 14–ன் மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையரின் (முதுநிலை) அறிக்கை

மற்றும் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், 1999ம் வருடம், சென்னை–91, மடிப்பாக்கம், ராம்நகர் தெற்கு, 11வது பிரதான சாலையில் மேற்கு பகுதியில் பிளாட் எண்.1639ல் அமைந்துள்ள மனுதாரரின் வீட்டிற்கான காலிமனை வரி எண் 14–188–22075–000–க்கான ரூ.12,376/–ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டு, அந்த சொத்துவரி எண் 14–188–22075–000 ரத்து செய்யப்பட்டு விட்டதாக, தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் மனு மீது மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. G.நந்தகுமார்,
பிளாட் எண் 1639,
11வது பிரதான சாலை, ராம்நகர் தெற்கு,
மடிப்பாக்கம்,
சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம்,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ./உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/3/26
செயலாளர்.
20/3/26 2/10